**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 284/2008**
**நாள்.25.06.2026**
**பி.வா.சா.3- பெரியக்காள்**
**க/பெ - பழனிச்சாமி**
**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

12. குப்பம்மாள் அவரது முருகனம்பலத்திற்கு 25.07.1973ம் தேதியில் ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான்.

13. அந்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்க்கவில்லை, என் அப்பா பார்த்துள்ளார். அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் விதிக்கப்பட்டிருந்து நிபந்தனை பற்றி தெரியுமா என்றால் எனது அப்பாவிற்கு தான் தெரியும்.

14. 25.07.1973 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் ஒரு ஆறுமுகபிள்ளையிடம் இருந்து ஈட்டு கடனாகவ ரூ.5370/- யையும், ரொக்கமாக பெற்றப்பட்ட ரூ.830/- யையும் சேர்த்து ரூ.6000/- ல் பாதி பங்கு ரூ.3000/- ஐ குப்பம்மாளின் தம்பி முருகனம்பலம் செலுத்திட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது என்றால் என் அப்பாவிற்கு தெரியும், அந்த பணத்தை என் அப்பா செலுத்திவிட்டார்.

15. அவ்வாறு என் அப்பா ரூ.3000/- யை செலுத்தியதற்கான ரசீதோ அல்லது ஆறுமுகபிள்ளையிடமிருந்து பெறப்பட்ட ஆவணமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் பஞ்சாயத்து மூலமாக நேரடியாக செலுத்தப்பட்டது.

16. ஆறுமுகபிள்ளையிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையில் பாதியான ரூ.3000/- ஐ முருனம்பலமோ, எனது தந்தையோ செலுத்தவில்லை என்றாலும், நேரடியாக கொடுத்துவிட்டதாக வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, வாய்க்கரலாக நேரடியாக கொடுக்கப்பட்டது.

17. பெற்ற கடன்தொகை ரூ.6000/- யை செலுத்த தவறியதற்காக ஆறுமுகபிள்ளை குப்பம்மாள் மீது வழக்கு தொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது, பணத்தை என் அப்பா செலுத்திவிட்டார்.

18. முருகனம்பலம் செலுத்த வேண்டிய கடன்தொகையான ரூ.3000/- யை செலுத்தவில்லை என்றாலும், என் அப்பாவிற்கு கிரையம் செய்து கொடுத்த

கிரையபத்திரத்தில் ஈட்டுகடன் ரூ.3000/- யை செலுத்திவிட்டேன் என்று குறிப்பிடவில்லை என்றாலும், அவ்வாறு செலுத்தவில்லை என்பதால் தான் மேற்படி கிரைய பத்திரத்தில் அந்த விவரத்தை குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல, என் அப்பா பணத்தை செலுத்திவிட்டார்.

19. 2ம் பிரதிவாதியான என் அப்பா பணத்தை செலுத்தை செல் ரசீது பெறவில்லை என்றாலும், குப்பம்மாள் 2005ம் ஆண்டு வரை செலுத்தாத கடன் தொகைக்கு வட்டியுடன் சேர்த்து உள்ள தொகைக்கு ஆறுமுகபிள்ளைக்கு மேற்படி கடனை செலுத்தி செல் ரசீது பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

20. முருகனம்பலமோ, எனது தந்தையோ கடனை செலுத்தவில்லை என்பதால் 1973ம் வருடம் நிபந்ததையுடன் எழுதிவைக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை குப்பம்மாள் ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல.

21. முருகனம்பலத்திற்கு 1973ம் ஆண்டு தானசெட்டில்மெண்ட் மூலம் கிடைத்த சொத்தை பொறுத்து குப்பம்மாள் ரத்து செய்துவிட்ட சூழலில் மேற்படி தானசெட்டில்மெண்ட் மூலம் கிடைத்த சொத்தை கிரையம் பெற்றுள்ள எனது தந்தையின் கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

22. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியும். எதிர்வழக்குரையில் கூறப்படாத சங்கதிகளை சேர்த்து தவறான சங்கதிகளுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபணவாக்குமூலம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் அதற்கு இடைஞ்சல் செய்யும் நோக்கத்துடன் எதிர்வாதம் செய்துவருகிறோம் என்றாலும் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**